மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண்.193 /2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.பாண்டிசிவகாமி, கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : இருளாயி (பி.வா.சா.2)<br>த/பெ.க/பெ :<br>கிராமம் :<br>தாலுகா : | மதம் :<br>தொழில் :<br>வயது : |

16.06.2026

**6, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதன் விஸ்தீரணம், நான்குமால் ஆகியவை தெரியுமா என்றால் தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் என்ன விபரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் பரிவர்த்தனை ஆவணம் ஏற்படுத்திக் கொண்ட 2ம் பிரதிவாதி யாரிடம் இருந்து அந்த சொத்தினை கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் பரிவர்த்தனை ஆவணம் ஏற்படுத்திக் கொண்ட 2ம் பிரதிவாதி எவ்வாறு கிரையம் பெற்றார் என்ற விபரம் தெரியாமல் நாங்கள் கிரையம் பெற்ற ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து பரிவர்த்தனை ஆவணம் 6, 7 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 6, 7 பிரதிவாதிகளை பொறுத்து தாவா சொத்தானது பூர்விக சொத்து அவர்களுக்கும் இதில் பாகம் உள்ளது என்றால் சரியல்ல.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

1. தாவா வழக்கின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான், கையொப்பம் மட்டும் செய்வேன். 16.04.2026ம் தேதியன்று நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து காட்டி கையொப்பம் பெற்றார்களா என்றால் எனக்கு

தெரியவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் 3வது பாராவில் 1ம் வாதியின் திருமணத்திற்கும், சீர்வரிசை பொருட்கள் வாங்குவதற்கும், திருமணத்தினை விமர்சையாக நடத்துவதற்கும் 2வது லக்க சொத்தினை கிரையத்திற்கு விற்றுள்ளார் என்று கூறியுள்ளது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் புஞ்சையும், புஞ்சையும் மாற்றி கொண்டோம் அது மட்டும் தான் எனக்கு தெரியும். புஞ்சையும், புஞ்சையும் மாற்றி கொண்ட விபரத்தை தவிர வேறு விசயங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி நிறுவனத்தை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவர்கள் எங்கள் ஊரில் இடங்கள் வாங்கியுள்ளார்கள்.

2. தாவா 1வது லக்க சொத்தினைதான் நாங்கள் பரிமாற்றம் செய்து கொண்டோம் என்றால் எனக்கு தெரியாது. அதன் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. 07.08.2013ம் தேதியன்று வீரசோழன் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 877/2013 பிரகாரம் 1வது லக்க சொத்து மற்றும் சர்வே எண். 125/2 ஆகிய இரண்டு சர்வே எண்களும் சேர்த்து 4 ஏக்கர் 92 செண்ட்டில் 2 ஏக்கர் 19 செண்ட்டை 2ம் பிரதிவாதி எனக்கு பரிவர்த்தனை ஆவணம் ஏற்படுத்திய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி நிறுவனம் கொடுத்த சொத்தை நான் வாங்கினேனா என்றால் வாங்கினேன். தாவா சொத்து 2ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு உரிமை இல்லை என்றால் எங்களுக்கும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கும் பாத்தியப்பட்ட சொத்தை எங்களுக்கு பரிவர்த்தனை செய்ய 2ம் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் வாதியின் தகப்பனாரும், சகோதரரும் கிரையம் செய்து கொடுத்த சொத்தை தவிர மற்ற தாவா சொத்துக்களில் எங்களுக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவர் 2ம் பிரதிவாதி நிறுவனத்திடம் 1வது லக்க சொத்தில் வடபுறம் 2 ஏக்கர் 19 செண்ட் போக மீதம் 2 ஏக்கர் 73 செண்ட்டில் வடபுறம் 74 செண்ட்டை 2ம் பிரதிவாதி எனது கணவருக்கு 23.04.2018ம் தேதியன்று ஆவண எண்.379/2018 பரிவர்த்தனை செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

3. நாங்கள் மேற்படி சொத்திற்கு ஈடாக கண்டுகொண்டான் மாணிக்கம் கிராமத்தில் உள்ள எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 2ம் பிரதிவாதிக்கு பரிவர்த்தனை செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். தாவா 1லக்க சொத்தை பொறுத்து எனது கணவரும், நானும் 2ம் பிரதிவாதியிடம் செய்து கொண்ட பரிவர்த்தனை வாதிகளை சட்டப்படி கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பரிவர்த்தனை அடிப்படையில் நாளது தேதிவரை தாவா சொத்தினை நாங்கள் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது தரிசாக உள்ளதா என்றால் ஆமாம். பரிவர்த்தனை அடிப்படையில் அனுபவம் செய்யாததால்தான் நாளது தேதிவரை தாவா சொத்து தரிசாக உள்ளது என்றால் சரியல்ல. பரிவர்த்தனை 1வது லக்க சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை